## தொழில் துறை – உயர் கல்வியில் தமிழ்நாடு முதன்மை மாநிலம்!

# இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத்தூதர் விக்ரம் துரைசாமி பாராட்டு!

## லண்டனில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நேரில் தெரிவித்தார்!

**லண்டன், செப்.5-**

**தமிழ்நாடு முதலமைச்சர்மு.க. ஸ்டாலின் அவர்களுடனான சந்திப்பின்போது, தொழில்துறை மற்றும் உயர்கல்வியில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கி வருவதை இங்கிலாந்து நாட்டிற்கான இந்திய தூதர் விக்ரம் துரைசாமி அவர்கள் பாராட்டினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இங்கிலாந்து பயணத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டின் முதலீடு மற்றும் உலகளாவிய ஈடுபாடு குறித்து இங்கிலாந்து நாட்டிற்கான இந்திய தூதர் விக்ரம் துரைசாமி அவர்களை இலண்டனில் சந்தித்துப் பேசினார்.

தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி மற்றும் உலகளாவிய நடவடிக்கைகளுக்கு இந்தியத் தூதர் விக்ரம் துரைசாமி அவர்கள் தனது பாராட்டுகளை தெரிவித்ததோடு, தமிழ்நாட்டின் தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் பொருளாதார செயல்திறனையும் பாராட்டினார். இங்கிலாந்து மற்றும் உலகம் முழுவதும் உள்ள முதலீட்டாளர்களுக்கு மிகவும் விரும்பமான இடங்களில் தமிழ்நாடு ஒன்றாகும் என்று தெரிவித்தார்.

சமீபத்தில் நிறைவடைந்த இந்தியாஇங்கிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை பயன்படுத்திடும் சிறந்த நிலையில் உள்ள இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும் என்பதை விக்ரம் துரைசாமி அவர்கள் எடுத்துரைத்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இங்கிலாந்து பயணத்தின் போது மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழ்நாட்டின் முதலீட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், எதிர் காலத்தை நோக்கியதாகவும், உலகளாவிய சந்தை வாய்ப்புகளுடன் திட்டமிட்ட ரீதியில் இணைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

உயர்கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கி வருவதை இந்தியத் தூதர் குறிப்பாகப் பாராட்டினார். புதிய தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் கட்டமைப்பின் கீழ் இந்தியாவில் பல்கலைக்கழக வளாகங்களை நிறுவ விரும்பும் இங்கிலாந்து நாட்டின் பல்கலைக் கழகங்களுக்கு தமிழ்நாடு சிறந்த தேர்வாக இருப்பதை அவர் குறிப்பிட்டார். மேலும், இங்கிலாந்து நாட்டு கல்வி நிறுவனங்களுடன் மாநிலத்தின் முனைப்பான ஈடுபாட்டையும் வரவேற்றார்.

சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கான ஒழுங்குமுறை ஆதரவு மற்றும் உள்கட்டமைப்பு உள்ளிட்ட இங்கிலாந்துதமிழ்நாடு கல்வி கூட்டாண்மைகளை எளிதாக்குவதில் மாநிலத்தின் முயற்சிகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியத் தூதருடன் பகிர்ந்து கொண்டார். அப்போது, பல நிறுவனங்களுடன் நடந்து வரும் சந்திப்புகள் மற்றும் இந்தியாஇங்கிலாந்து கல்வி உறவுகளை வலுப்படுத்துவதில் ஒரு முன்னெடுப்பு நடவடிக்கையாக எக்ஸிடர் பல்கலைக்கழகத்துடன் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அவர் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின்போது, நமது இளைஞர்களுக்கு உலகளாவிய வாய்ப்புகளை உருவாக்கும் உயர்தர முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் சுட்டிக்காட்டினார்.

இந்தியத் தூதருடனான சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, மெளலிவாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சான்றிதழ்கள் மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், ஊராட்சி மன்றத் தலைவர் திவ்யா சத்தியநாதன், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனை! காஞ்சி வடக்கு மாவட்ட

## இளைஞர் அணி - மாணவரணி - மகளிரணி - மகளிர் தொண்டரணி கூட்டம்!

### கோல்டு பிரகாஷ் – பிரபு – உதயா கருணாகரன் – சசிகலா அறிக்கை!

சென்னை, செப்.5-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் பிரபு, மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன், மகளிர் தொண்டரணி சசிகலா ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவரணி, மகளிர் அணி, மாவட்டத் துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான பொது ஆலோசனை இன்று (வெள்ளிக்கிழமை 5.9.2025) கூட்டம் மாலை 4 மணிக்கு ஆலந்தூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்பு ஆலோசனை வழங்க உள்ளார்.

இந்த முக்கிய ஆலோசனைக் கூட்டத்தில் அனைத்து அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்: கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.9.2025 அன்று வருகை, 10.9.2025 துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தர உள்ளார் மற்றும் கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அணிகளின் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஜி.எஸ்.டி. வரி குறைப்பு:

# பிரதமர் மோடி அரசின் 8 ஆண்டுகால தூக்கம் தற்போதுதான், தெளிந்துள்ளது !

### காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்!

புதுடெல்லி, செப்.5-

ஜி.எஸ்.டி. வரி குறைப்பால் பிரதமர் மோடி அரசு 8 ஆண்டுகால தூக்கம் தற்பொழுதுதான் தெளிந்துள்ளது என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.



இதுகுறித்து மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில், ஜி.எஸ்.டி. வரி விகிதங்களை எளிமையாக்க 8 ஆண்டுகளுக்கு மேலாக காங்கிரஸ் கட்சி வலியுறுத்தி வருவதாக கூறினார். ஒரே நாடு ஒரே வரி என்று சொன்ன மோடி அரசு, மாறாக 9 வகையான வரிகளை அறிமுகப்படுத்தியதை சுட்டிக்காட்டினார். ஜி.எஸ்.டி. வரி சிக்கல்களால் சிறு தொழில்கள் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட கார்கே, மாதந்தோறும் ஜிஎஸ்டி வரி வசூலில் சாதனை படைத்ததாக பெருமையாக கூறும் ஒன்றிய அரசு, அந்த பணம் சாமானிய மக்களிடம் இருந்து மிகப் பெரிய தொகையாக வரியாக சுரண்டியதை மறக்க வேண்டாம் என கூறியுள்ளார். 8 ஆண்டுகள் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்து மோடி அரசு, இறுதியாக விழித்துக்கொண்டு ஜி.எஸ்.டி. வரி விகிதங்களை மாற்றியுள்ளதாக குறிப்பிட்டார். ஜிஎஸ்டி வரி புதிய மாற்றங்கள் காரணமாக, அடுத்த 5 ஆண்டுகளுக்கு மாநிலங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்

இவ்வாறு மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டுள்ளார்.



கேரளா மாநில தி.மு.க. சார்பாக பாலக்காடு மாவட்டம் மன்னார்காடு நெல்லிப்புழா–பாலாட்டு ஹாலில் ஓணம் திருவிழாவினை முன்னிட்டு நலத்திட்ட வழங்கும் நிகழ்ச்சியானது நேற்று (5.09.2025) மாநிலத் திமுக அமைப்பாளர் கே.ஆர் முருகேசன் ஏற்பாட்டில் கேரளா மாநிலத் திமுக தலைவர் மன்னார்காடு கே.எஸ்.ரஞ்சித் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்சியில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் கலந்து கொண்டு 300கும் மேற்பட்ட மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, ஓணம் சத்யா விருந்தை துவக்கி வைத்து ஓணம் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டார். முன்னதாக பாலக்காடு மாவட்ட கழக செயலாளர் ஜாபர் அனைவரையும் வரவேற்றார். உடன் அபுபக்கர், மாணிக்கன், பாலன், மொய்து, ஷைனி, மஜீத்,அக்பர் அல்தான், ப்ளசன் மணப்போயல், தங்கச்சன், ஜீஜி மோகன், ஜெயன் ஜிம்மி உட்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.


